## செப்டம்பர் - 11- திங்கள்

**"என் கற்பாறையும் மீட்பும் அவரே. எனவே, நான் சிறிதும் அசைவுறேன்" திருப்பாடல் 62 : 6**

### முதல் வாசகம் : கொலோசேயர் 1 :24 –- 2 : 3

சகோதர சகோதரிகளே! இப்பொழுது, உங்கள் பொருட்டுத் துன்புறுவதில் நான் மகிழ்ச்சி கொள்கிறேன். கிறிஸ்து தம் உடலாகிய திருச்சபைக்காக வேதனையுற்றார். அவர் மேலும் படவேண்டிய வேதனையை என் உடலில் ஏற்று நிறைவு செய்கிறேன். என்மூலம் இறைவார்த்தையை முழுமையாக உங்களுக்கு வழங்கும் பொறுப்பைக் கடவுள் எனக்குக் கொடுத்தார். எனவே நான் திருத்தொண்டன் ஆனேன். நான் வழங்கும் இறைவார்த்தை ஊழிஊழியாக, தலைமுறை தலைமுறையாக மறைந்திருந்த இறைத்திட்டத்தைப் பற்றியது. அத்திட்டம் இப்பொழுது இறைமக்களுக்கு வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. மக்களினங்களிடையே அது அளவற்ற மாட்சியுடன் செயல்படுகிறது என்பதைத் தம் மக்களுக்குத் தெரிவிக்க கடவுள் திருவுளம் கொண்டார். உங்களுக்குள் இருக்கும் கிறிஸ்துவைப் பற்றியதே அத்திட்டம். மாட்சி பெறுவோம் என்னும் எதிர்நோக்கை அவரே அளிக்கிறார். கிறிஸ்துவைப்பற்றியே நாங்கள் அறிவித்து வருகிறோம். கிறிஸ்துவோடு இணைந்து ஒவ்வொருவரும் முதிர்ச்சிநிலை பெறுமாறு ஒவ்வொருவருக்கும் அறிவுரை கூறி முழு ஞானத்தோடு கற்பித்து வருகிறோம். இதற்காகவே வல்லமையோடு என்னுள் செயல்படும் அவருடைய ஆற்றலுக்கு ஏற்ப வருந்தி பாடுபட்டு உழைக்கிறேன். உங்களுக்காகவும் இலவோதிக்கேயா நகர மக்களுக்காகவும் என்னை நேரில் பார்த்திராத மற்றனைவருக்காகவும் நான் மிகவும் வருந்தி உழைக்கிறேன். இதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டுமென விரும்புகிறேன். என் உழைப்பால் உள்ளங்கள் யாவும் ஊக்கமடைந்து அனைவரும் அன்பினால் ஒன்றாக இணைக்கப்பட வேண்டும் அந்த அறிவுத்திறனால் உறுதியான நம்பிக்கையை அவர்கள் நிறைவாகப் பெறவேண்டும். இதுவே என் விருப்பம். ஞானமும் அறிவுமாகிய செல்வங்கள் அனைத்தும் கிறிஸ்துவில் மறைந்துள்ளன.

**பதில்பாடல் :** என் மீட்பும் மேன்மையும் கடவுளிடமிருந்தே வருகின்றன.

### நற்செய்தி : லூக்கா 6 : 1 - 11

அக்காலத்தில் ஓய்வுநாள் ஒன்றில் இயேசு வயல்வழியே செல்ல நேர்ந்தது. அவருடைய சீடர் கதிர்களைக் கொய்து கைகளினால் கசக்கித் தின்றனர்பரிசேயருள் சிலர், "ஓய்வுநாளில் செய்யக் கூடாததை நீங்கள் செய்வதேன்?" என்று கேட்டனர்.அதற்கு இயேசு மறுமொழியாக, "தாமும் தமமுடன் இருந்தவர்களும் பசியாய் இருந்த போது, தாவீது செய்ததைக் குறித்து நீங்கள் வாசித்தது இல்லையா?அவர் இறை இல்லத்திற்குள் சென்று, குருக்கள் மட்டுமே அன்றி வேறு எவரும் உண்ணக்கூடாத அர்ப்பண அப்பங்களை எடுத்துத் தாம் உண்டதுமன்றித் தம்மோடு இருந்தவர்களுக்கும் கொடுத்தார் அல்லவா?" என்று கூறினார்.மேலும் அவர்களிடம், "ஓய்வுநாளும் மானிடமகனுக்குக் கட்டுப்பட்டதே" என்றார்.மற்றோர் ஓய்வுநாளில் இயேசு தொழுகைக்கூடத்திற்குள் சென்று கற்பித்தார். அங்கே வலக்கை சூம்பியவர் ஒருவர் இருந்தார்.மறைநூல் அறிஞரும் பரிசேயரும் இயேசுவிடம் குற்றம் காணும் நோக்குடன், ஓய்வுநாளில் அவர் அவரைக் குணப்படுத்துவாரா என்று கூர்ந்து கவனித்துக் கொண்டேயிருந்தனர்.இயேசு அவர்களுடைய எண்ணங்களை அறிந்து, கை சூம்பியவரை நோக்கி, "எழுந்து நடுவே நில்லும்!" என்றார். அவர் எழுந்து நின்றார்.இயேசு அவர்களை நோக்கி, "உங்களிடம் ஒன்று கேட்கிறேன் ஓய்வுநாளில் நன்மை செய்வதா, தீமை செய்வதா? உயிரைக் காப்பதா, அழிப்பதா? எது முறை?" என்று கேட்டார்.பிறகு அவர் சுற்றிலும் திரும்பி அவர்கள் யாவரையும் பார்த்துவிட்டு, "உமது கையை நீட்டும்!" என்று அவரிடம் கூறினார். அவரும் அப்படியே செய்தார். அவருடைய கை நலமடைந்தது.அவர்களோ கோபவெறி கொண்டு இயேசுவை என்ன செய்யலாம் என்று ஒருவரோடு ஒருவர் கலந்து பேசினர்.

**தியானம்:** மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் மதிப்பளிக்கப்படத் தகுதியுள்ளவர்கள் என்பதில் எந்தவித மாற்றுக்கருத்துக்கும் இடமில்லை. இன்று எம்மிடையே தாழ்வு மனப்பான்மையினால் பலர் சிக்கித்தவிக்கும் சூழ்நிலையில் லூக்கா நற்செய்தியில் இயேசுவின் வார்த்தைகள் தாழ்வு மனப்பான்மையைப் போக்கக்கூடிய விதத்தில் அமைந்திருப்பதை எமக்கு சுட்டிக்காட்டுகிறது. நாம் தாழ்வு மனப்பான்மையோடு வாழ்ந்தால் அதிலிருந்து மீண்டு வெளியே வரவேண்டும். அன்பு எனப்படுவது எமது உணர்வுகளின் வெளிப்பாடு. நம் ஆண்டவர் இயேசு இந்த உலகத்தில் ஒவ்வொருவரையும் முழுமையாக அன்பு செய்பவர். தாழ்த்தப்பட்டோர், ஏழைகள், அடிமைகள், நோயாளிகள் என்று சமுதாயம் ஒதுக்கி வைத்திருந்த விளிம்புநிலை மக்களை இயேசு தாமாகவே சந்தித்து, அவர்களும் கடவுளின் பிள்ளைகள், அவர்களுக்கும் கடவுளின் அன்பு இருக்கிறது என்பதை நிறைவோடு வாழ்ந்து காட்டியதனை லூக்கா நற்செய்தி தெளிவுபடுத்துகிறது. சூம்பிய கை உள்ள மனிதரை ஓய்வுநாளில் குணப்படுத்தப் போகிறேன் என்பது இயேசுவுக்குத் தெரியும். தான் செய்யப்போகிற ஒவ்வொன்றிலும், குற்றம் காண்பதற்காக பலர் காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதும் இயேசுவுக்குத் தெரியும். இயேசு நினைத்திருந்தால், தனியே மறைவாக சூம்பிய கை உள்ள மனிதரைக் குணப் படுத்தியிருக்கலாம். ஆனால், அனைவருக்கும் முன்னிலையில் இயேசு குணப்படுத்தி கை சூம்பிப்போயிருக்கிற மனிதருக்கு மட்டுமல்ல, தன்னிடத்தில் குற்றம் காண்கிற எமக்கும் பாடம் கற்பிக்க நினைக்கிறார். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் மதிக்கப்படத் தகுதியுள்ளவர்களே. ஏனென்றால், நாம் அனைவருமே இறைவனின் சாயலைத் தாங்கியிருக்கிறோம். நாமும் இறை இயேசுவில் உறுதிபெறுவோம். எமது கத்தோலிக்க வாழ்வு ஒரு புனிதமான வாழ்வு மட்டுமல்ல, மரபுகளையெல்லாம் கடந்து மற்றவர்களை புனித நிலைக்கு உயர்த்த உதவுகிற வாழ்வு.